**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No. C.C.72/2018**

**DEPOSITION OF WITNESS FOR PW.1**

| | | | |
|---|---|---|---|
| **Name :** | **MONIKA** | **Caste:** | **OC** |
| **Father's Name:** | **LAKSHMIPATHY** | **Calling :** | **IT EMPLOYEE** |
| **Village:** | **GOVINDHAPURAM** | **Religion:** | **HINDU** |
| **Taluk:** | **GUDIYATTAM** | **Age:** | **31** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.01.2020

## *முதல் விசாரணை*

*நான் தற்போது பெங்களூருவில் ஐ.டி.கம்பெனில் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் 1வது எதிரி எனது கணவர் ஆவார். ஆஜர் 2வது எதிரியை எனது கணவர் 2வதாக திருமணமாக திருமணம் செய்துள்ளார். ஆஜர் 4ம் எதிரி 1வது எதிரியான எனது கணவரின் தங்கை ஆவார். 5வது எதிரி எனது கணவரின் தம்பி ஆவார். எனக்கும் 1வது எதிரிக்கும் 06.05.2011ம் தேதி குடியாத்தம் ராஜாகோயிலில் அமைந்துள்ள ஆர்.ஜி.டி திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. எனது வீட்டில் திருமணத்திற்காக எனக்கு 16 சவரன் தங்க நகையும் 1வது எதிரிக்கு 3 சவரன் தங்க செயின் போட்டார்கள். திருமணத்திற்கு நான் பெங்களூருவிலிருந்து விடுமுறையில்தான் வந்தேன். திருமணத்திற்கு பிறகு 1வது எதிரி வீட்டில் தங்கியிருந்தேன். திருமணத்திற்கு பிறகு சிறிது காலம் எங்களது திருமண வாழ்க்கை சரியாகத்தான் இருந்தது. சுமார் 1 மாதம் கழித்து 1வது எதிரிக்கு இரவு 11.00 மணிக்கு மேல் தொலைபேசி அழைப்பு அடிக்கடி வருவது வழக்கம். யார் பேசுகிறார்கள் என்று நான் கேட்டால் தனது உறவினர்கள் பேசுகிறார்கள் என்று கூறுவார். மேற்படி நிகழ்வு தொடர்ந்ததால் எங்கள் இருவருக்கும் சரியான புரிதல் இல்லாமல் இருந்தது. 1வது எதிரியான எனது கணவர் 2011ம் வருடம் ராணிப்பேட்டையில் உள்ள லெதர் கம்பெனில் சூப்ரவைசராக பணியாற்றி வந்தா. அந்த சமயத்தில் 1வது எதிரி வாரத்தில் 2,3 நாட்கள் ராணிபேட்டையில் தங்கிவிடுவார். நான் பெங்களூரில் வேலை செய்வதால் விடுமுறை நாட்களில் 1வது எதிரியின் வீட்டிற்கு வரும்போது என்னிடம் சரியாக பேச மாட்டார். 1வது எதிரியின் நடவடிக்கையில் நிறைய மாற்றங்கள் இருந்தன. என்ன பிரச்சினை என்று நான் 1வது எதிரியிடம் கேட்டபோது திருமணத்திற்கு என் வீட்டில் கொடுத்த நகைகள் போதாது என்றும் இன்னும் 20 சவரன் தங்க நகைகள் வேண்டுமென்றும் வற்புறுத்தினார். அந்த நேரத்தில் எங்களுக்கு வசதியில்லாத காரணத்தினால் 1வது எதிரி கேட்ட நகைகளை கொடுக்க இயலவில்லை. அதனால் 1வது எதிரி என்னை துன்புறுத்தினார், என்னிடம் சரியாக பேசுவதில்லை. 04.03.2012ம் தேதி எனக்கு வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் பெண்குழந்தை பிறந்தது. எங்களது வீட்டில் 1வது எதிரியிடமும் அவரது குடும்பத்தாரிடமும் குழந்தை பிறந்த தகவல் சொல்லியும் அவர்கள் யாரும் வந்து மருத்துவமனையிலோ, எனது வீட்டிலோ வந்து குழந்தையை பார்க்கவில்லை. 17.03.2012ம் தேதி குடியாத்தம் கோவிந்தாபுரத்தில் உள்ள என் வீட்டிற்கு நீதிமன்ற அறிவிப்பு ஒன்று 1வது எதிரியான எனது கணவர் தன்னுடன் குடும்பம் நடத்த வருமாறு கோரி அறிவிப்பு அனுப்பி இருந்தார். எனக்கு அறுவை சிகிச்சை செய்து குழந்தை பிறந்த காரணத்தினால் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தற்போது என்னால் வரஇயலாது என பதில் அறிவிப்பு அனுப்பினேன். 16.6.2014ம் தேதி நீதிமன்றம் என்னை எனது கணவருடன் சேர்ந்து வாழ அறிவுறுத்தியதின் பேரில் 1வது எதிரியின் வீட்டிற்கு மேற்படி தேதியில் நானும் எனது அம்மா பேபி மற்றும் எனது குழந்தையுடன் சென்றோம். அங்கு சென்றபோது இந்த வழக்கின் எதிரிகள் அனைவரும் வீட்டிலிருந்தார்கள் அவர்கள் எதற்காக இங்கே வந்தீர்கள் என்று எங்களை திட்டினார்கள் அதற்கு நான் நீதிமன்றத்தின் அறிவுறுத்தின்பேரில் சேர்ந்து வாழ வந்துள்ளேன் என்று கூறினேன். அப்போது அவர்கள் கோர்ட்டு சொன்னா நாங்கள் வாழ விட்டு விடுவோமா*

*வாழ விடமாட்டோம் என்று எதிரிகள் சொன்னார்கள். பேசிக்கொண்டிருக்கும்போதே 3வது எதிரியான முனியம்மாள் என்னை அடித்துவிட்டார். ஏன் அடித்தீர்கள் என்று எனது அம்மா கேட்டபோது ஆஜர் 4வது எதிரியான யசோதா எனது அம்மாவை எட்டி உதைத்தார். நான் எதற்காக எனது அம்மாவை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு 1வது எதிரி ஒரு கட்டையை எடுத்து எனது தலையில் அடித்தார். தலையில் அடித்த வலியில் நான் இருந்தபோது 1வது எதிரி என்னிடமிருந்து குழந்தையை பிடுங்கிக்கொண்டு 1வது மற்றும் 2வது எதிரி எனது கழுத்தை நெரித்தார்கள். நான் அதற்குள் எனது குழந்தையை வாங்கிக்கொண்டு எனது அம்மாவை கூட்டிக்கொண்டு குடியாத்தம் அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கு சென்று எழுத்துபூர்வமாக புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கைப்பட எழுதி கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார்மனு அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதுசம்மந்தமாக அனைத்து மகளிர் காவல்நிலைய போலீசார் என்னை விசாரித்தார்.*

*எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.*

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, GUDIYATTAM.**
**Case No.C.C.72/2018**

**DEPOSITION OF WITNESS FOR PW.2**

| | | | |
|---|---|---|---|
| **Name :** | **BABY** | **Caste:** | **OC** |
| **Husband Name:** | **LAKSHMIPATHY** | **Calling :** | **--** |
| **Village:** | **GOVINDHAPURAM** | **Religion:** | **HINDU** |
| **Taluk:** | **GUDIYATTAM** | **Age:** | **65** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.01.2020

***முதல் விசாரணை***

***நான் தற்போது பெங்களூரில் எனது மகளுடன் வசித்து வருகிறேன். அ.சா.1 மோனிகா எனது மகள் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 06.05.2011ம் தேதி என் மகளுக்கும் ஆஜர் 1வது எதிரிக்கும் ஆர்.ஜே.டி திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்காக சீர்வரிசையாக எனது மகளுக்கும் 16 சவரன் தங்கை நகைகளும், 1வது எதிரிக்கு 3 சவரன் தங்க செயின் கொடுத்தோம். திருமணம் முடிந்து 1 மாதம் சந்தோஷமாக எனது மகளும், 1வது எதிரியும் இருந்தனர். அதன்பிறகு இரவு நேரங்களில் ½ மணி நேரம் போன் பேசிவிட்டு வருவார். எனது மகள் அந்த விவரம் பற்றி கேட்கும்பொழுது 1வது எதிரி தனது உறவினரிடம் பேசிவிட்டு வந்ததாக கூறுவார். எனது மகள் பெங்களூரிலிருந்து சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறைகளில் 1வது எதிரியின் வீட்டிற்கு வருவார். கல்யாணத்திற்கு முன்பிருந்து 1வது எதிரி ராணிப்பேட்டையில் வேலை செய்து கொண்டிருந்தார். 1வது எதிரி வாரத்திற்கு 2,3 நாட்கள் வீட்டிற்கு வருவதில்லை. பின்னர் 1வது எதிரி என் மகளுக்கு கொடுத்த சீதனம் பத்தாது என்றும் மேலும் 20 சவரன் தங்க நகைகள் வேண்டும் என்றும் கேட்டார். அதற்குள் எனது மகள் கருத்தரித்து 04.03.2012ம் தேதி பெண் குழந்தை அறுவை சிகிச்சை மூலம் வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் பிறந்தது. குழந்தை பிறந்த 15 நாட்கள் கழித்து எனது மகளுக்கு நீதிமன்றத்திலிருந்து 1வது எதிரியிடம் சேர்ந்து வாழ வேண்டுமென்று அழைப்பாணை வந்தது. அறுவை சிகிச்சை செய்துகொண்டதால் தற்சமயம் எனது மகள் வர இயலாது என்று பதிலறிவிப்பு கொடுத்தோம். 16.06.2014ம் தேதி 1வது எதிரியின் வீட்டிற்கு நானும் எனது மகள் மோனிகா மற்றும் அவரது குழந்தையுடன் சென்றோம். அங்கே சென்றபோது வழக்கின் எதிரிகள் அனைவரும் எங்களை திட்டினார்கள். கோர்ட்டில் ஆர்டர் கொடுத்தால் இங்கே வாழ்ந்து விடுவீர்களா எங்களால் வாழ வைக்க முடியாது என்று எதிரிகள் எல்லோரும் சொன்னார்கள். அதன்பிறகு 1வது எதிரியின் அம்மாவான 3வது எதிரி முனியம்மாள் அ.சா.1 ஆன எனது மகளை அடிக்க வந்தார். நான் ஏன் எனது மகளை அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு 1வது எதிரி எனது மகளை அடித்தார் மற்றும ்4வது எதிரி என்னை எட்டி உதைத்தார். அதன்பிறகு 1வது எதிரி குழந்தையை பிடுங்கி எனது மகளை கழுத்தை நெரித்தார். பின்னர் குழந்தையை பிடுங்கிக்கொண்டு நானும் எனது மகளும் குடியாத்தம் அனைத்து மகளிர் காவல்நிலையம் சென்றோம். எனது மகள் நடந்த விவரங்களை எழுத்து பூர்வமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்.***

***எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.***